UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம்

**சி. அபிராமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் வ. கணபதிராமன்**
இணைப்பேராசிரியர், நெறியாளர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்-608 002

**ஆய்வுச் சுருக்கம்**

மேல்மருவத்தூர் என்னும் அன்றைய கிராமம் பல்வேறு இனத்தவர்கள் வாழும் இன்றைய சிறு நகரம் ஆகும். சித்தர்கள் வாழ்ந்த மருத்துவத்தூர் என்னும் ஊரே மருவத்தூர் என்று இன்று மருவி வழங்குகிறது. மேலும் சித்தர்களின் வாழ்விடங்களும் அவர்தம் அருள் நெறிகளும் ஆராய்கிறது. ஆகம நெறியில் அமையாத கோயில் தான் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம். இக்கோயிலின் உயிர்நாடியாகக் கருதப்படுபவர்தான் அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா. அன்னை ஆதிபராசக்தி ஆட்கொண்டு அருள்வாக்கு வழங்குவதாகப் பக்தர்கள் மற்றும் தொண்டர்கள் கூறுகின்றனர். மேலும் பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கி மாதவிலக்கு ஒரு தடை அல்ல! எனவே எல்லா நாட்களிலும் என் சந்நிதிக்கு வந்து வழிபட மகளிருக்கு உரிமை உண்டு என்கின்றாள். எம்மதமும் சம்மதம் அனைத்து மதத்தினவரும் வருகின்றனர். மருவத்துர் தலத்தினை மையமாகக் கொண்டு உள்ளூர் மட்டுமல்லாமல் வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களிலும் திருவுருவப் படத்தினை வைத்து கூட்டுவழிபாடு செய்கின்றன. இத்தகைய வழிபாட்டு முறைகள் சித்தர் பீடத்திலும், மன்றங்களிலும், சக்திபீடங்களிலும் வழிபாட்டு முறைகளும் ஒன்று போல் காணப்படுகின்றன என்பதனைப் பதிவு செய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம் சாதி சமயங்களைக் கடந்த சித்தர்பீடம் எனவும் ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்டது. இத்திருத்தலம் என்ற சிறப்பு வாய்ந்தது. குறிப்பாக பாமர மக்கள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என வேறுபாடு இல்லாமல் ஆலயத்திற்கு செல்லுதல், பெண்கள் சென்று வழிபடவும், அபிடேகம், அர்ச்சனை செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. பெண்கள் தங்களின் மாதவிடாய் காலத்திலும் கருவறைக்கு சென்று அன்னையை வழிபடலாம். சித்தர்பீடத்தில் 21 சித்தர்களின் ஜீவசமாதி உண்டு என்பார்கள். சித்தர்களின் தலைவியாக அன்னை ஆதிபராசக்தி இத்திருத்தலத்தில் அமர்ந்து காட்சியளிக் கின்றாள். தமிழ் மந்திரங்களால் இங்கு எல்லா பூசைகளும் நடத்தப்பட்டு வருகிறது. நாடெங்கும் வாரவழிபாட்டு மன்றங்கள் மற்றும் சக்திபீடங்கள் அமைத்து ஆன்மீகத்தையும் பக்தியையும் வளர்த்து வருகின்றனர். “வீரவழிபாடு, ஞானவழிபாடு, இயற்கை வழிபாடு, அன்னை வழிபாடு ஆகிய அத்தனை வழிபாடுகளின் ஒட்டுமொத்தமாக உள்ளடக்கத்தை நாட்டுப்புற வழிபாட்டில் காணலாம்”[1] இவற்றைக் குறித்து இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

### சக்தி வழிபாடு

எந்தவொரு நிகழ்ச்சியும் காரணமின்றிச் செயல்பட முடியாது. இவ்வகையில் சக்திவழி பாடும் ஆதிநாள் தொட்டு வணங்கி வழிபடப் பட்டு வந்திருக்கின்றன எனில் தக்க காரணங்கள் இருக்க வேண்டும். "அன்னை வழிபாட்டுக்கென்றே, சக்தி வழிபாட்டு என்றே ஆதிநாளில் வாழ்ந்த நம் முன்னோர்கள், கட்புலனுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில், அவ்விருந்தின் வாயிலாக மனத்தை அமைதிக்கொள்ளச் செய்வதற்கும், ஒருமுகப்படுத்தி இன்புறு வதற்கும் ஏற்ற வகையில் அன்னையின் ஆலயங்களை எழுப்பினர்."[2]

### சித்தர்பீடத்தின் தோற்றமும் அமைப்பும்

"1966ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் நாள் வீசிய புயல் காற்றால் மேல்மருவத்தூரில் உள்ள வேப்பமரம் விழுந்ததில் அதன் முன்னிருந்த புற்று கரைந்து சுயம்பு வெளிப்பட்டது."[3] சுயம்புத்தலங்கள் பெரும் பாலானவை சிவத்தலங்களிலே இருக்கின்றன. சக்தித்தலங்கள் ஒரு சில தலங்கள் மட்டுமே அமைந்துள்ளது. இந்த மேல்மருவத்தூரில் அன்னை தானே உவந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டாள். சக்தி தலங்களாக நான்கு,

1. "வடநாட்டில் – நைமிசாண்யத்தில் லிங்கதாரணி
2. கர்நாடக மாநிலத்தில் உள்ள கடிலம் - நந்தினி நதிக்கரையில் பண்டாசுரனை தேவி வதம் செய்த இடம்
3. கோழிக்கோடு மாவட்டத்தில் கொல்லூரி மூகாம்பிகை
4. மேல்மருவத்தூர் சித்தர்பீடத்தில் அன்னை ஆதிபராசக்தி சுயம்பு வடிவில் வெளிப்பட்டுள்ளாள்"[4]

"அருள் நிறைந்த ஞானியர்களுக்குக் கடவுள் காட்சி கிடைத்த இடத்திலும், ஆற்றல் மிக்க ஞானியர் தம் பருவுடம்பை நீத்த இடத்திலும் சுயம்பு தோன்றும்" என்று சமயப்பெரியோர் கூறுவர்.

"ஞானி ஒருவனுக்கு ஆண்டவன் ஜோதி வடிவில் காட்சி தருகின்ற இடத்தில் அந்த ஜோதியே நாளடைவில் கற்பிழம்பாகிச் சுயம்பாகும்" என்று காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறியுள்ளார்.

"இச்சித்தர் பீடத்தில் உள்ள சுயம்பு தோன்றி 2000 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன."[5]

"இந்த சித்தர் பீடத்தில் 21 சித்தர்களின் ஜீவசமாதி உள்ளன. இவர்களில் ஆண் சித்தர்களும் உண்ட. பெண் சித்தர்களும் உண்டு. இஸ்லாமியச் சித்தர்களும் உண்டு."[6] சித்தர்கள் உறையும் பிற கோயில்களுக்கும் சித்தர் பீடத்திற்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு. பிற கோயில்கள் ஆகமவாதிகளின் ஆதிக்கத்தில் அமைந்தவை. சித்தர்களின் கொள்கைகள் அங்கே பின்பற்றப்படுவதில்லை. தீட்சை பெற்ற அர்ச்சகர்களோ. குறிப்பிட்ட இனத்தார் மட்டுமோ தான் பூசை செய்யமுடியும். மேல்மருவத்தூர் சித்தர் பீடம் ஆகம முறைகளுக்கு அப்பாற்பட்டது. இங்கே "அன்னை அருள்வாக்கில் எந்த முறைகளை அளிக்கின்றாளோ அவைதாம் இங்கே வேதம்! அவைதாம் இங்கே ஆகமம்! இங்கே நடைபெறுவது தெய்வீக நிர்வாகம் (Divine Administration), இங்கே வந்து அனுபவப்பட்டால் மட்டுமே இதனைத் தெரிந்துக்கொள்ள முடியும்."[7]

இங்குள்ள பூசை முறைகள், வேள்விகள், விழாக்கள், நடைமுறைகள் யாவும் அன்னை அருள்வாக்கின்படி நடத்தப்படுபவை. இங்கே வாரவழிபாட்டு மன்றத்தார் முறைபோட்டுக் கொண்டு வந்து கருவறைப்பணி செய்கின்ற னர். பெண்களே அன்னைக்கு அபிடேகம், அலங்காரம், அர்ச்சனைகள் செய்ய உரிமைத் தரப்பட்டுள்ளது. 108,1008 தமிழ் மந்திரங் களைக் கொண்டே அன்னைக்கு அர்ச்சனை, வேள்விப்பூசை நடத்தப்படுகிறது. இங்குள்ள நடைமுறைகளை மிக நுணுக்கமாகக் கூர்ந்து கவனித்து வந்தால் மட்டுமே சித்தர் நெறிகளின் அடிப்படைகளை நடைமுறைப் படுத்தும் இடம் இது என்பது விளங்கும். எனவே தான் இது 'சித்தர் பீடம்' என்றும், 'சித்தர் மன்றம்' என்றும் சொல்லப்படுகிறத. கோயில் என்றும் ஆலயம் என்றும் பாமர மக்கள் புரிந்து கொள்வதற்காகவே சொல்லப் படுகிறது.

### அமைப்பு

1. ஓம்சக்தி மேடை
2. அதன்முன் நான்குகால் மண்டபம்
3. அதன்முன் எண்கால் மண்டபம்

**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

4. கருவறை
5. வலப்புறம் குருபீடம்
6. குருபீடத்திற்கு வலப்புறம் சப்த மாதர் சன்னதி
7. இடப்புறம் தலவிருட்சமான வேப்பமரம்
8. குருப்பீடத்திற்கு பின்புறம் நாகபீடம்
9. பரிவார தேவதைகள்

இவைதான் இன்றைய சித்தர்பீடத்தின் தோற்றம்.

ஆரம்பத்தில் சுயம்பிற்கு மட்டுமே வழிபாடு செய்யப்பட்டது. பின்பு பாமர மக்களும், எளிய நிலையில் உள்ளவர்களும் நெஞ்சில் நிறுத்தி வழிபடுவதற்கு உருவ அமைப்பில் சிலை அமைத்துத் தருமாறு அன்னையிடம் வேண்டினர். அவ்வேண்டுதலுக்கு அன்னை கருணை மழையாக பக்தர்களுக்கு அன்னை சிலை அமைக்க உத்தரவுக் கொடுத்தாள். சுயம்புக்குப் பின்னால் அழகெல்லாம் குடி கொண்ட கோலத்தோடு அன்னை சிலையாக அமர்ந்துள்ளாள்.

**இரண்டு வகை வழிபாடு**

சக்தி வழிபாடு என்பது ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பரவி இருந்த ஒன்று. நாளா வட்டத்தில் விதி மார்க்கம் (சந்திர முறை) பக்தி மார்க்கம் என்ற இரண்டு வகையாக வழிபாட்டு முறை பிரியலாயிற்று. விதி மார்க்கம் பழைய சாத்திரங்கள், மந்திரங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது. பக்தி மார்க்கம் இறைவனிடம் அன்பு செலுத்தத் தொடங்கி இறுதியில் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் வழியை மேற்கொண்டது.

பக்தி மார்க்கத்தில் ஆடம்பரமோ, படாடோபமோ இல்லை. மந்திரங்களைக் கூட வாய் விட்டு உரக்கக் கூறும் பழக்கம் இல்லை.

“ஆறு எழுத்து அடங்கிய அருமறைக் கேள்வி”[8] என்று திருமுருகாற்றுப்படை இதனைக் கூறும். கண்ணப்பர் வரலாற்றை அறிந்தவர்கள் இந்த இரண்டு வகைப் பூசை முறைகளையும் நன்கு புரிந்து கொள்ள முடியும். கண்ணப்பர் பக்தி மார்க்கத்தில் திளைத்தவர். குடுமித் தேவரை அன்றாடம் வழிபடும் சிவகோசிரியார் விதி மார்க்கத்தில் அழுத்தமாக நின்றவர். ஒருவர் செய்ததை மற்றவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருவர் வைத்த பூவையும், நைவேத்தியத்தையும் மற்றொருவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இருப்பினும் இவர்கள் இருவரையும் ஏற்றுக் கொண்ட இறைவன் இருவருடைய பூசைகளையும் தனித்தனியே ஏற்றுக் கொண்டான்.

**ஆன்மிகப் புரட்சி பெண்களுக்கு ஆன்மிகத்தில் முதலிடம்**

பெண்களுக்கு ஆன்மிகத்தில் முக்கிய இடம் தந்து, ஆன்மிகத்தில் இதுவரை யாருமே செய்யாத புரட்சியாக அனைத்து வயது பெண்களையும் கருவறைக்குள் அனுமதித்தும், பெண்களையே அர்ச்சனை, அபிடேகம், ஆராதனை செய்ய வைத்தும் வேள்விகள் செய்ய கற்றுக் கொடுத்தும் மகளிரை கோபுரத்தில் ஏற்றி கோயில் கும்பாபிடேகமும் செய்ய வைத்த ஒரே ஆன்மிக குரு அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா அவர்கள் மட்டுமே! “கருவறை சுமக்கும் பெண்கள் கோவில் கருவறைக்குள்ளும் செல்லலாம்; அதற்கு இயற்கையாக அமைந்த மாதவிலக்கும் ஒரு தடை அல்ல”[9] என்று கூறி கடந்த 55 ஆண்டுகளாக மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்திலும், அதன் கிளைகளாக தமிழ்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலும், மன்றங்கள் மற்றும் சக்திபீடங்களும் உலகெங்கும் பரவியுள்ள ஆதிபராசக்தி வழிபாட்டில் பெண்களுக்கு முக்கியத்துவம் தந்து ஆன்மிகத்தை அடித்தளத்து பாமர மக்களிடமும், பெண்களிடமும் வளர்த்து ஆன்மிக குருவாக இருந்து அனைவருக்கும் வழிகாட்டி வருகிறார்.

**சித்தர் பீடத்தின் தனித்தன்மை**

* இந்தச் சித்தர்பீடத்தில் 21 சித்தர்களின் ஜீவசமாதி உண்டு என்பார்.
* சாதி-சமய வேறுபாடின்றி அனைவரும் இந்தச் சித்தர் பீடத்திற்குச் செல்லலாம்.
* அனைவரும் கருவறைக்குள் சென்ற அர்ச்சனை செய்ய அனுமதி தரப்பட்டுள்ளது.
* பெண்களை வைத்து வேள்வி செய்து வைத்திருப்பதும், தைப்பூச விழாவைப் பெண்களே பொறுப்பேற்று நடத்த வைத்திருப்பதும் பெண்களைக் கருவறைக்குள் சென்று அர்ச்சனை செய்ய வைத்திருப்பதும் மகத்தான சாதனைகள். மகளிரின் மாதவிடாய்

காலங்களில் கூட மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தின் கருவறைக்குள் நுழைந்து வழிபாடு நிகழ்த்தும் உரிமை வழங்கப்படுகிறது.

* ஆடிப்பூரத்தன்று எல்லோரும் கருவறையிலுள்ள சுயம்பிற்கு பாலபிடேகம் செய்ய அனுமதி.
* அவரவர் மத சம்பிரதாயப்படி வணங்கி வழிபட உரிமை அளித்திருக்கிறது.
* தமிழ் மந்திரங்களால் எல்லா பூசைகளும் நடத்தப்பட்டு வருகிறது.
* நாடெங்கும் வாரவழிபாட்டு மன்றங்களை அமைத்து ஆன்மிகத்தையும் பக்தியையும் வளர்த்து வருகிறது.
* பக்தர்களை உழவாரப் பணிகளைச் செய்ய வைத்து ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிவருகிறது.
* கொள்கை அளவில் இருக்கின்ற சமய நெறிகளைச் செயற்படுத்தி நடைமுறையில் கொண்டுவந்து செயல்முறைச் சமயமாக ஆக்கும் புனிதத் தலமாக விளங்குகிறது.
* "சிவப்பாடை மூலம் உலகிற்கு ஆதிபராசக்தி பக்தர்களை மன ஒருமைப்பாடு உடையவர்கள் என்பதை இனங்காட்டி வருகிறது."[10]
* மேல்மருவத்தூர் நுழைந்தாலே நம் கண்களுக்குத் தெரிவது சிவப்பு ஆடை அணிந்தப் பக்தர்கள் கூட்டம்தான். இந்த ஆடையே பக்தர்களிடம் ஒரு கட்டுப்பாட்டையும் மன ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தி விடுகிறது.

**சித்தர் பீடத்தின் சமுதாயப் பணிகள்**

தம்மால் இயன்ற அளவு சமுதாயத்தில் வாழும் மக்களுக்கு உதவுவது சமுதாயப் பணிகள் ஆகும். அருள்திரு பங்காரு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட ஆதிபராசக்தி சித்தர் பீடம் மற்றும் அதன் ஆன்மீக இயக்கம் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு சமுதாய நலத்திட்டங்கள் மற்றும் உதவிகள் ஆகும். சுயநலம் இல்லாமல் பொதுநலம் கொண்டு, எவ்வித உதவியையும், பிறரிடம் எதிர்ப்பார்க்காமல் உதவிசெய்வது இதனைச் சுருக்கமாகத் தொண்டு அல்லது சேவை எனலாம். இத்தகைய சிறந்த சமுதாயப் பணிகளை மேல்மருவத்தூர் சித்தர்பீடம் தொடர்ந்து செய்து வருகிறது.

"தொண்டு தொண்டு என்று
தொண்டு செய்ய ஓடனும்
தொண்டு செய்ய முடியாவிட்டால்
தொண்டரோடு சேரனும்"[11]

என்று பாடுகிறார்கள். இந்தப் பாடலுக்கு ஏற்ற வகையில் தொண்டர்கள் தொண்டு களை மேற்கொள்வதற்குத் தயங்குவதில்லை. சமுதாயத்தில் பல பிரச்சனைகள் தலை விரித்து ஆடுகின்றன. மக்கள் எதிர் கொள்கின்றனர். இவற்றுள் முதலாவதாகக் கருதப்படுவது விதவைகள் 'கைம்பெண்' பற்றியவை ஆகும். அவர்கள் படும் துயரம், விதவை களின் துயரத்தைத்துடைய யாரும் முன்வருவ தில்லை. அவர்கள் எதிரே வருவதே அபச குணம் என்று கருதுகின்றனர். இத்தகை யோரின் துயரத்தை துடைக்க அருள்மிகு பங்காடு அம்மா 'விதவைகள் புணர்வாழ்வு இல்லம்' என்ற ஒன்றை ஏற்படுத்தினார். இதன் மூலம் ஊதியம் பெறும் தொழிலில் இவர்களை ஈடுபடுத்தினார். தையல் இயந்திரங்களை அருள்திரு பங்காரு அம்மா தந்து ஆடைகளைத் தைத்து, அதன் மூலம் அவர்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

ஒவ்வொரு விழாவின் சிறப்பே அன்னதானம் செய்வதுதான். பல்வேறு மாநிலத்திலிருந்து, மாவட்டங்கிளலிருந்து பல்வேறு ஊர்களிலி ருந்து வந்த பக்தர்களின் பசியைப் போக்கு வதற்காக அருள்திரு பங்காரு அம்மா ஆயிரக்கணக்கானோர் அமர்ந்து உண்பதற் காக வசதி வாய்ப்போடு உணவுக்கூடம் அமைத்துள்ளார். உழவாரப் பணி என்பது கோயிலில் செய்யும் பணி ஆகும். அதாவது கோயிலில் சுத்தம் செய்தாலே உழவாரப் பணியாகும். இத்தகைய பணியினை ஒவ்வொரு ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றங்கள் மற்றும் சக்திபீடங்களிலும் செய்து வருகின்றது. இப்பணியால் சுற்றுப்புறச் சுகாதாரச் சீர்திருத்தம் பெற்று வருகின்றது. இத்தகைய பணியைத் திருநாவுக்கரசரும் மேற்கொண்டார்.

ஆதரவற்றோருக்கு உதவும் பணிகளை அருட்திரு பங்காரு அம்மா அவர்கள் விவசாய மக்களுக்கு ஏர் உழும் கருவி,

சலவைத் தொழிலாளர்களுக்குத் துணியினைத் தேய்க்கும் பெட்டி, காது கேளாதவர்க்கு கருவி, இலவசமாக ஏழைகளுக்குத் திருமணம் செய்து வைத்து, அத்திருமணத்திற்குத் தேவையான பொருட்களையும், மாங்கல்யத்தையும் இலவசமாக வழங்குகின்றனர். நடக்க முடியாதவர்களுக்கு மூன்று சக்கர வாகனம், சிறுதொழில் தொடங்குவதற்காகத் தேவைப்படும் பொருட்கள், தையல் இயந்திரம் போன்றவை அருள்திரு பங்காரு அம்மா தம் பிறந்தநாள் அன்று ஏழை எளியவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடியை வழங்கி மக்களின் குறையை நிவர்த்தி செய்கின்றனர். சேவை, தொண்டு, சரணாகதி இவையே முதன்மையானது.

## முடிவுரை

மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தில் இன்று வரை சுயம்பு உருவான விதம், அதன் வரலாறு, சுயம்பு உள்ள கோயில்கள் காணப்படும் இடங்கள் குறிப்பாகப் பெண் தெய்வங்கள் காணப்படும் கோயில்களின் எண்ணிக்கை ஆகியவற்றை இந்த ஆய்வுக் கட்டுரை விளக்குகிறது.

ஆகம நெறியில் அமையாத கோயில் தான் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடம். இக்கோயிலின் உயிர்நாடியாகக் கருதப் படுபவர்தான் அருள்திரு பங்காரு அடிகளார் அம்மா. ஆதிபராசக்தி இவரின் மனதில் புகுந்து அருள்வாக்கு வழங்குவதாக அடியவர்கள் கருதுகிறார்கள். உணர்ந்தால் மட்டுமே நம் மக்களுக்கு விளங்கும். இத்தகைய அருள்திரு பங்காரு அம்மா அன்று முதல் இன்று வரை எப்படி மக்களின் மனதில் உள்ளார், சமுதாயப் பணிகள் செய்தும் பாமர மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தியும் ஆன்மிகத்தையும் பக்தியையும் வளர்த்தார் என்பதனையும் இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

மருவத்தூர் கூடத்தினை மையமாகக் கொண்டு உள்ளூர் மட்டுமல்லாமல் வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களிலும் திருவுருவப் படத்தினை வைத்து கூட்டுவழிபாடு செய்கின்றனர். சித்தர்பீடத்திலும் சக்திப்பீடத்திலும் மற்றும் வழிபாட்டு மன்றங்களும் வழிபாட்டு முறைகளும் ஒன்றுபோல் காணப்படும். மேலும் சித்தர்களின் வாழ்விடங்களும் அவர்தம் அருள் நெறிகளும் இவ்ஆய்வு கட்டுரை ஆராயப்பட்டுள்ளன.

## சான்றெண் விளக்கம்

1. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 238.
2. புலவர் சி. முத்துப்பிள்ளை, அருள் சுரக்கும் சக்தி ஆலயங்கள், ப. 21.
3. செய்தித்தாள் அன்றைய நாளிதழ், 29.11.1966, ப. 3.
4. சக்தி ஆர். கோவிந்தராஜி, தர வரலாறு-1, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடம், ப. 86.
5. அன்னையின் அருள்வாக்கு, ஆலயப் புலவர்கள், ப. 37.
6. மேலது., ப. 38.
7. அன்னையின் முத்தான அருள்வாக்கு, ஆலயப் புலவர்கள், ப. 21.
8. திருமுருகாற்றுப்படை-4, திரு ஏரகம் (சுவாமிமலை), பா.எ. 186.
9. அன்னையின் அருள்வாக்கு, ஆலயப் புலவர்கள், ப. 29.
10. பெண்களைக் கவரும் அன்னை அதிபராசக்தி, தேவி வார இதழ் அச்சகம், சென்னை, 1988, ப. 71.
11. தொண்டர்குழு, மன்றப்பாடல், மேல்மருவத்தூர் அன்னையின் அற்புதம் (முதல் பாகம்), ப. 16.

## துணைநூற்பட்டியல்

1. சக்தி ஆர். கோவிந்தராஜ், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம், தலவரலாறு-1, ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ பண்பாட்டு அறநிலை, மேல்மருவத்தர், 2004.
2. சக்தி ஆர். கோவிந்தராஜ், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம், தலவரலாறு-2, 2005.
3. இரா. அரங்கநாதன், நலம் தரும் வேள்வி, விஜயா பதிப்பகம், 20, இராஜ வீதி, கோவை, 1999.
4. அன்னையின் முத்தான அருள்வாக்கு, ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ பண்பாட்டு அறநிலை, மேல்மருவத்தர், 2009.
5. ஆலயப் புலவர்கள், எம்மதமும் சம்மதம், ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ பண்பாட்டு அறநிலை, மேல்மருவத்தர், 2009.
6. சக்தி ஒளி, 2007.
7. விழா மலர், 2006.